REGD No. M. 4642

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10. | 22–7–51 | இதழ் 4.

T. N. Parang
News Ag
Kulit

புது ஜாலம்

[அண்ணல்]

அறுந்த தாலிகள்!
குவிந்த பிணங்கள்!
குலைந்த குடும்பங்கள்!
துப்பாக்கிச் சப்தம்!
தடியடி! சிறை!
ஏழ்மை! பசி! கண்ணீர்!
திண்டாட்டம்! திகைப்பு!
மண் மேடான வீடுகள்!
மரக்கிளைகளிலே 'சாவு'!
குழந்தைகள் வியாபாரம்!
கூக்குரல்! ஒப்பாரி!!

இத்தனையும் மட்டுமல்ல, கேடு
ள் என்ற பட்டியலில் எவையெவை
ருமோ. அத்தனையும் பரிசாகப்
பெற்றிருக்கிறோம்,
நல்லவர்கள்'
பாலப் பேசி
டாளும் பாக்கி
ம் பெற்ற காங்கி
ஸ்'கன்னியர்கள்'
ஆட்சியில்.

சுந்தரமான வாழ்வை எதிர்பார்த்
தார், சூறாவளி வேகம் தாங்காது
கைத்துக் கிடக்கின்றனர்.

'அப்பப்பா! வெள்ளையன் ஆட்
யார்!' என்று கேவலத்தோடும்,
ஆவேசத்தோடும் பேசியோர்
நாம் நாம். ஆனால், அந்த ஆதிபத்திய
வெறியர்களைவிட மிகக் கேவலமான
ர்கள் தாங்கள் என்பதைக் கண்
டாகக் காட்டிவிட்டனர், காங்கி
ஸ் ஆளவந்தார்.

நாடு—காடாகியிருக்கிறது, சுதந்
திரம் மலர்ந்தது என்ற சொல்
கேட்ட நான்காண்டுக்குள்.

இந்த நிலையை எவரும் மறக்க முடியாது—எத்தரையும், பித்தரையும் தவிர.

இவ்வளவு மோசமான நிலை, நாட்டில் மலர்ந்தது மட்டுமல்ல; இதற்குக் காரணமானது காங்கிரஸ் தான் என்பதும், உலகுக்குத் தெரிந்துவிட்டது.

உண்மையில், ஒரு நாட்டை அந்நிய ஆதிபத்தியத்திடமிருந்து மீட்ட எந்த இயக்கமும் களைந்து போனது கிடையாது, இவ்வளவு விரைவில்; எளிதில்—காங்கிரசைத் தவிர.

உலக வரலாறுகளையும், அரசியல் இயக்கங்களின் சரிதங்களையும் உணர்ந்தோர் காங்கிரஸ் கட்சிக்கு நேர்ந்த கதி குறித்து கண்ணீர் சிந்தாமலிருக்க முடியாது.

எவ்வளவு பலம் குவிந்திருந்தது! எத்தனை தியாகிகள் பலியாகியிருக்கின்றனர்! பட்டங்களையும், பதவிகளையும் துறந்தோர் தொகை கொஞ்ச, நஞ்சமா! மாடி வீட்டில் பிறந்தும் மண் குடிசையிலும் காராக்கிரகத்திலும் உழன்றோர் ஒருவர் இருவரல்லவே! எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் அனுபவித்தனர்! அதனால் அவர்கள் பெற்ற செல்வாக்குத்தான் சாமான்யமா! சுட்டு விரல் அசைத்தாலே சொன்னதெல்லாம் செய்யுமளவில் திரண்டிருந்த ஜனத்திரள் எவ்வளவு!

பணபலம், பத்திரிகை பலம், இதையெல்லாம் விட மேலான ஜன சக்தி அத்தனையையும் பெற்றிருந்த மாபெரும் கட்சி, காங்கிரஸ். இதை, எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஆனால் இன்று! அது கலனாகிப் போன கட்டடம்—காளான்களும், கறையான்களும், கள்ளியும் முள்ளும் நிரம்பியதோர் இடமாகிவிட்டது.

இந்தக் காட்சி இலேசானதல்ல; இதன் மூலம் கிடைக்கும் பாடமும் சாமான்யமானதல்ல.

உலக வல்லரசுகளின் ஒத்துழைப்பும் 'உம்' என்றால் உதவும்படியான செல்வாக்கும், உயர்ந்தோர் என்போர் துணையும் கொண்டு, கோலகலத்தோடு கோலோச்சும் கட்சி-'கூரையில்லா வீடு போலாகிவிட்டது.

மலைபோல இருந்தது; இன்று மண்ணுக்கடியிலே, தேடிப்பார்க்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது.

இது, எத்தகைய வீழ்ச்சி! தலையசைத்தால் 'என்ன? எவ்வளவு தேவை?' என்று ஓடிவரும் பிர்லாக்களும், காலடியிலே பொன்னையும் மணியையும் குவிக்கும் சிற்றரசர்களும், நாடு முழுமையும் செல்வாக்கோடு உலவும் தேசிய இதழ்கள் பலவும், ஆங்காங்கே உள்ள சீமான்களும் பூமான்களும், இருந்தும் இந்தக் கதி — ஏற்பட்டிருக்கிறது காங்கிரசுக்கு.

நாட்டிலே எவருடைய குரல் ஒலிக்குமோ அவரெல்லாம் காங்கிரசிலே உள்ளனர்.

ஆலைடரசர்கள் மட்டுமல்ல பண்ணையரசர்கள்கூட, அங்கேதான்.

பத்திரிகையாளர்கள் அங்கே—பணபீடங்கள், உலவுவதும் காங்கிரஸ் கூடாரத்திலேதான் இவைகளோடு கூட ஐந்தாறு ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தால், அதன் மூலம் வளர்ந்திருக்கும் அதிகாரச் செல்வாக்கும் அல்ப சொல்பமானதல்ல.

இருந்தும், "இந்தியாவின் இருதயம் காங்கிரஸ்தான்" என்று பேசப்பட்ட நாட்கள், உதிர்ந்து போய்விட்டன. அவ்வளவு செல்வாக்கும், செல்வமும், அதிகாரமும் கையிலே இருந்தும் காங்கிரஸ் கட்சி தேய்பிறையாகி விட்டது.

ஏன், இக்கதி? எப்படி யேற்பட்டது? இதற்கான சூட்சமம் தான் என்ன, என்பதை நாம் தேடிக் கண்டு பிடிக்கவேண்டிய சிரமத்தை வைக்கவில்லை, காங்கிரஸ்காரர்க்ள்.

அவர்களைக் கண்டாலே, நமக்கு காங்கிரசின் அழிவுக் கான காரணம் விளங்குகிறது. நேற்றுகுடிசையிலே உலவியவர் இன்று இருக்குமிடம் சாதாரணமானதல்ல! வாழ்க்கையோடு போராடியபோது அவர்களுக்கிருந்த தொல்லைகள் இன்றில்லை. சுதந்திரத்துக்காகப் போராடியபோது அவர்கள், சராசரி குடிமகன்களில், ஒருவராக இருந்தனர். ஆனால், அவர்களெல்லாம் இன்று!

அதிகாரம் கைக்கு மாறிய பிறகு அது தனது தோட்டத்தைச்செழிப்பாக்கும் வாய்க்கால் என்று பெரும்பாலானோர் கருதி, தங்கள் சுயநலங்களைப் பூர்த்திசெய்து கொண்டனர்.

தியாகத்தை,ஏலம்கூறி, விற்றனர்-அரசியல் விஷயங்களில்; லாபம் பெற்றனர்; அதனால் மக்களை மறந்தனர்.

மக்களை மறந்தனர்!—நான்காண்டு சுதந்திர ஆட்சியில் மக்கள் நலன்கள் கவனிக்கப்படவில்லை-சாதாரண எம். எல். ஏக்களால் மட்டும் என்றல்ல; பெரிய மந்திரிமார்களாலும் கூட.

இந்த அசிரத்தையும், சுயநலமும், சம எடையோடு அவர்கள் நெஞ்சத்தில் நிலைபெற்றதால், மக்களை நினைக்க முடியவில்லை; நினைக்க நேர்ந்தாலும், மறந்து விடவேமுயற்சிக்கின்றனர்.

இந்தக் கோளாறு, நாட்டின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டோரிடையில் ஏற்பட்டதால், நன்மை மலரவில்லை; தீமைகள் கொழுந்து விட்டெரியத் துவங்கின; காங்கிரஸ் என்றாலே 'சீச்சீ! வேறு வேலை இல்லையோ' என்று கேவலமாகப் பேசும் நிலை எங்கும்! எப்பக்கம் திரும்பினும்!!

* * *

இந்த எதிர் பாராத சூழ்நிலை, காங்கிரஸ் தலைவர்களுக்கு கலக்கத்தைத் தந்திருக்கிறது — தேர்தல் நெருங்குவதால்.

கலக்கமில்லாமலா இருக்க முடியும்! மூலைக்கு மூலை, எதிர்பாராதோரெல்லாம் எதிரிகளாவதும், நேற்று வரையில் கூடிகுலவியோர் தனித்தனி 'குடும்பமாக'த் தாவியோடுவதுமான நிலை வளரும்போது.

இந்தக் கலக்கம்' காங்கிரஸ் தலைவர்களை மிகவும் அதிகமாக வாட்டத் துவங்கியிருக்கிறது.

பொது மக்கள் பொங்கும் கடலாகியிருக்கின்றனர். 'காங்கிரஸ்' என்ற பெயரைக் கேட்டாலே, 'எரிமலை'யாகின்றது, அவர்கள் இதயம். "இதைச் செய்தோம் அதைச் செய்தோம்" என்று சொல்லிப் பெருமைப் படவோ-எதுவும்செய்யவில்லை, ஏதோ ஒன்றிரண்டைத் தவிர. அந்த ஒன்றிரண்டையும் காட்டி பூரிப்புப் பெறவோ, ஜமீன் ஒழிப்பு, மது விலக்கு, கோயில் நுழைவு போன்றவைகள் மிகமிகச் சாதாரணமாகி விட்டதோடு; அவைகள் எதிர்பார்த்த அளவு ஒழுங்காகவும் நடை பெறவில்லை.

ஆககே, அச்சம் அதிகமாகிறது, நினைக்க நினைக்க. துக்கம், வளர்கிறது எண்ண, எண்ண.

இந்த அச்சத்தையும் துக்கத்தையும் மறைத்து, மக்களின் ஆத்திரத்தைக் குறைக்க 'புது ஜாலம்' ஒன்றைக் காட்டத் துவங்கியிருக்கின்றனர்-காங்கிரஸ் தலைவர்கள்.

அந்தப் 'புது ஜாலம்' சர்க்காரால் நியமனம் செய்யப் பட்ட திட்டக் கமிஷன் என்பது, வரப் போகும் ஐந்தாண்டுகள் பற்றி வகுத்து வெளியிட்டிருக்கும் யோசனைகளாகும்

வரப் போகும் தேர்தலை யொ
யதாகவேத் தென்படுகிறது—
திட்டம்.

பெங்களூர் நகரில் கடந்த வா
கூடிக் கலைந்த அகில இந்திய கா
கிரஸ் மாநாட்டிலும் அத்திட்ட
பிரதானமாக அடிபட்டிருக்கிறது

அத்திட்டத்தின் முக்கிய நோ
கம்:

போருக்கு முன்பு எப்படி ம
ளுக்குத் தேவையான பொருள்
கிடைத்தனவோ அதே போல
கிடைக்குமாறு செய்வது.

இதை முக்கிய இலட்சியம
வைத்து, விவசாயம், நீர்ப்பாசன
மின்சார அபிவிருத்தி முதலிய
களை அதிகரிக்கவும், பொரு
தாரச் சீர்கேட்டைச் சீரமைப்ப
மான பல அம்சங்கள் விவரிக்
பட்டுள்ளன, அதோடு மேலும்
யோசனைகளும் கூறப்பட்டிருக்கி
றன. அவைகளில் முக்கியமான

(1) கிராமாந்தரங்களில் கூட்
றவு முறையில் விவசாயத்
வளர்ப்பது.

(2) வேலையில்லாமையை ஒழி
குடிசைத் தொழில்களுக்கு ஆத
தருவது.

இதுபோலப் பலப்பல, மே
படித் திட்டத்தில் கூறப்பட்
ன—யோசனைகளாக. கிரா
களில் விவசாயக் கூட்டுற
பண்ணை அமைக்கப்பட வேண்
என்று யோசனை கூறபட்டிருக்
மேற்படி திட்டத்தில், மற்றொ
இடத்தில், "உடனடியாக" என்
குறிப்பிடப்பட்டு, "வேண்டுமான
கிராம உணவு அதிகரிப்பு கவுன்
களை ஏற்படுத்தலாம்" என்று
கூறப்பட்டிருக்கிறது. கிராம உண
அதிகரிப்பு கவுன்சில்

நன்றி நவிலல்

10—7—51ல் நடந்த எ
சகோதரர் கே. ஆர். கோவிந்த
மீனாட்சி திருமணத்திற்கு வந்
தும், வாழ்த்துக் கடிதங்கள்,
கள், பரிசுகள் அனுப்பியும்
பித்த தோழர்களுக்கெல்லாம் இ
மூலம் என் உளங்கனிந்த நன்றி
தலைத் தெரிவித்துக் கொள்கிறே

கே. ஆர். இராமசாமி

றவுப் பண்ணை என்பது வேறுனது மட்டுமல்ல; வித் கள் நிரம்பியதாகும்.

மாதத்தில் மேற்படி திட்டம், ழமைக்கும் புதுமைக்கும் லம்' கட்டும் ஒரு 'முயற்சியை விக்கும் "கட்டுரை" போலவே சி தருகிறது.

திட்டக்கமிஷனின் யோசனைகள் வொன்றையும் புகுந்து நோக்கி , சமுதாயத்திலே புது மலர்ச்சி விரும்புவோருக்கு, தெம்போ, ளிவோ ஏற்பட வழியில்லை: கயுமில்லை.

வீட்டுக் குழந்தையின் கழுத்தில் க்கும் தங்கச் சங்கிலியைக் கள விரும்பும் கள்ளன், குழந்தை ப் பார்த்து, "பாப்பா! வா, ங்கே மிட்டாய் தருகிறேன்" று ஆசைச் சொல் காட்டி, ாற்றி, அழைத்துச் சென்று, தங் சங்கிலியைக் களவாடத் திட்ட வது போலத் தென்படுகிறது— த்திட்டம்.

ஆகவேதான், இதை, காங்கிர ரின் புது ஜாலம் என்று குறிப் லானோம்.

புதுஜாலம்! — ஆனால், இதுவும் வர்களாகவே கண்டுபிடித்து விட் து அல்ல.

ரஷ்யாநாடு, ஜாரின் பிடியிலி ந்து விலகி பொதுவுடைமை டாக ஆனபிறகு 1927-ல் ஐந்து ண்டுத்திட்டமொன்று வகுத்தது- தன் முதலில். போட்ட திட்டத் தயும் நான்காவது ஆண்டிலேயே டித்தும் காட்டிற்று.

அந்த ரகத்தைச் சேர்ந்தது ல்ல, இவர்களுடையது! இவர்க ாகவே புதிதாகக் கண்டுபிடித்த, வெளியிடுவது மல்ல இத்திட்டம்! துமட்டுமின்றி, இதுபோன்ற திட் ங்கள் தீட்டப்படுவது புதிதுமல்ல —இந்திய பூமிக்கு!

1946-ல் இதுபோலத்தான் ஆலை ரசர்களின் மேற்பார்வையில் ரூ. 00 கோடியிருந்தால் போதும் ன்ற விளக்கத்தோடு பம்பாய் திட் ம் என்ற பெயரோடு ஒன்று தயா க்கப்பட்டது.

அத்திட்டம் தயாரிக்கும்படித் ண்டியது, இவர்களல்ல—வெள் ளயர்கள்.

இந்தியாவை தொழில்வளம் மிக்க நாடாக ஆக்குவது என்றே ஆவலின் பேரில் தயாரிக்கப்பட்டதாகக் கூறப் பட்டது—அதைத் தயாரித்த ஆலையரசர்களால்!

அதோடு, அதற்குத் தேவைப் படும் பணத்தை அமெரிக்காவிட மிருந்து கடனாக வாங்கிக்கொள்ள லாம் என்று 'பேரம்'கூடப் பேசி னர், அதைத் தயாரித்த காரண புரு டர்கள்.

"இது — அமெரிக்கா முதலாளி களுடன் இந்திய முதலாளிகள் செய்துகொள்ளும் சரண்டல் சதி" என்றெல்லாம், நலம்விரும்பிகளால், கண்டிக்கப்பட்டது— காரசாரமாக!

அதேபோல கடந்த ஆண்டு கொழும்புத்திட்டம் என்ற பெயரால் கொழும்புவில் தென்கிழக்கு ஆசிய நாடுகள் சார்பில் ஒரு திட்டம் தயார் செய்யப்பட்டது.

பரஸ்பரம் காமன் வெல்த்நாடுகள், ஒவ்வொன்றும் தங்களுக்கிடையில் உதவி செய்துகொள்ளவேண்டும் — நாட்டின் முன்னேற்றத்துக்கான வகைகளில் என்பதுதான் மேற்படி திட்டமும்.

இத்திட்டப்படி ஆறு ஆண்டு களில் ரூ 1840 கோடி செலவிட நேரும் என்று கூறப்பட்டிருந்தது.

தற்போது காங்கிரஸ் சர்க்கார், ஏதோ புதிதாக ஒன்றை வெளியிடு வதுபோலத் தந்திருக்கும், இப்புது திட்டம், கொழும்புத் திட்டத்தைப் பார்த்து அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதுதான்.

ஆனால் ஒருவித்தியாசம்! கொழும் புத்திட்டத்தில் ஆறு ஆண்டுகள் கூறப்பட்டிருக்கிறது.

இப்புதுத் திட்டத்தில் ஐந்து ஆண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்புத் திட்டப்படி ரூ 1840 கோடி தேவைப்பட்டது இந்தியாவுக்கு-ஆறு ஆண்டுகளுக்கு.

புதுத்திட்டப்படி ரூ 1793கோடி தேவைப்படுகிறது—ஐந்து வருடங் களுக்கு.

"திட்டக்கமிஷன் குறிப்பிட்டுள்ள பலதிட்டங்கள் சென்னை சர்க்காரால் மேற்கொள்ளப்பட்டு நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதாகும்"

கூறுவது நாம் அல்ல; சென்னைச் சர்க்கார்!

திட்டக் கமிஷனின் யோசனைகள் ஒன்றும் புதிதானவை அல்ல—இப் படித்தெரிவிக்கிறது, சென்னை சர்க் கார்.

எனவே, ஏதோ புதிதாகப்பெரிய காரியத்தைச் செய்வதுபோல பத்தி ரிகைகள் பிரசுரம் செய்யும் இத்திட் டம் ஒரு புதுத்தேர்தல் ஜாலம்!

* * *

"ஐந்து வருடத் திட்டம் போட்டுவிட்டோம்!"

"என்னென்ன செய்யப்போகி றோம் தெரியுமா?"

"ரூபாய் 1793 கோடி செல விடப்போகிறோம்!"

இதுபோலப் பெருமையடித்துப் பேசிக்கொள்வதற்காகவே, இப்'புது ஜாலம்' புறப்பட்டிருக்கிறது,என்று கருதத்தூண்டுகிறது நம்மை—இத் திட்டத்தை பங்களூர் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டிருப்பதால்.

ஐந்தாண்டுகளுக்குத் தேவைப் படும் ரூ 1793 கோடி ரூபாயில் ரூ 300 கோடி வெளிநாடுகளிலி ருந்து தேவைப்படுகிறது.

வெளிநாடுகளிலிருந்து ரூ 300 கோடி தேவையென்றால், அந்தநாடு களிலிருந்து, இந்தியா கடனாகவோ அல்லது வேறு வழிகளிலோ வாங் கித்தான் ஆகவேண்டும்.

இது வெளிநாட்டாருக்கு இந்திய மக்களை 'அடகு' வைப்பதுபோலத் தான் ஆகும். அதோடு கடன் கொடுத்த நாடு சமயம் நேரும்போ தெல்லாம் தனது ஆதிக்கத்தைச் செலுத்தத் தவறாது!

அந்த 300 கோடிபோக மீதம் தேவைப்படுவது 1493 கோடி!

ஆயிரமல்ல, இலட்சமல்ல தேவைப்படுவது 1493 கோடி!

இந்த 1493 கோடியையும் இந்தி யாவே தேடிக்கண்டாக வேண்டும்,

ஓராண்டுக்கு இந்திய சர்க்காரின் வரவு செலவுத் தொகை (பட்ஜட்)

விலகுகிறேன்

'தேன்கூடு' இதழின் கௌரவ ஆசிரியர்களில் ஒருவனாயிருந்த நான் அப்பதவியினின்று விலகிக் கொள்கிறேன் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

கா. இரா. சத்தியேந்திரன்.

ரூ 300 கோடி என்றால், அதைப் போலவே மேலும் ரூ 26 கோடி ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக வசூலிக்கப்படவேண்டும்.

அதிகமாக, இந்திய சர்க்காரின் கஜானாவுக்கு ஆண்டுதோறும் ரூ 26 கோடி, சென்றாகவேண்டும்.

இந்தத் தொகையை வசூலிக்க டில்லி சர்க்காருக்குள்ள முக்கிய வழிகள் இரண்டே இரண்டுதான்.

ஒன்று:— புதிதாக மக்கள்மீது வரிகளைப்போடுவது.

இரண்டு:— கடன்கள்மூலம் பணம் வாங்குவது.

டில்லி சர்க்கார் இந்த வழிகள் மூலம் ஐந்தாண்டுத் திட்டத்துக்கென ஒவ்வொரு வருடமும் ரூ 26 கோடி பணம் தேடியாக வேண்டும்.

அதேபோல, டில்லிக்குக் கட்டுப்பட்ட எல்லாமாகாணங்களும், ஒவ்வொரு ஆண்டும் ரூ 213 கோடி, கண்டுபிடித்தாக வேண்டும் -- ஐந்தாண்டுத் திட்டத்துக்கென.

இத்திட்டத்துக்கு பண வருவாய் கண்டுபிடிக்கும் கஷ்டம் மத்தியசர்க்காரைவிட மாகாணங்களுக்கே அதிகமிருக்கிறது.

இந்தப் புதுத்திட்டப்படி பார்த்தால், சென்னைசர்க்கார், ஐந்தாண்டுகளுக்கும் 137 கோடி பணம் சம்பாதித்தாகவேண்டும்.

இதில், மத்தியசர்க்கார் ரூ30கோடி உதவும்—ஐந்து ஆண்டுக்கும்.

137 கோடிக்கு 30 கோடி!

மீதி 107 கோடியைத் தேடிப் பெறும் பொறுப்பு சென்னை சர்க்காருடையதுதான்.

அதாவது ஒவ்வொரு ஆண்டும் தங்கள் பட்ஜட்டில் ரூ 20 கோடி மீதம் காணவேண்டும்.

ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ 20 கோடி!

அப்படிக் கஷ்டப்பட்டு சென்னை சர்க்கார் பணம் தேடினாலும், இந்தப் புதுத் திட்டத்தால், எவ்வித பலனும் இல்லையாம்—நமக்கு.

சென்னை சர்க்காரே சொல்லுகிறது இதை:—

"ஐந்தாண்டுத் திட்டம் எங்களுக்குத் திருப்தி இல்லை"

"வடநாட்டு கோதுமை விளைவிக்கும் திட்டத்தால் எங்களுக்கு என்ன பயன்?"

"அரிசி உற்பத்திக்கான திட்டங்களுக்கு ஆதரவு தராத திட்டத்தால் எங்களுக்கு நன்மை என்ன?"

இப்படிக் கேட்டிருக்கிறார்கள்—வேதனையோடு. திட்டத்தில் கூறப்பட்டிருப்பதை கூர்ந்து நோக்கினால், வழக்கம் போல டில்லியின் கருணை, இந்தத் திட்டத்தில் கூட சென்னைக்கு எட்டாதது புரியும்!

நாடு—திண்டாடிக் கொண்டிருக்கிறது.

மக்கள் குமுறிக் கிடக்கின்றனர், பசியாலும்—ஆடையில்லாததாலும், அத்தியாவசியப் பொருள்களெல்லாம் கிடைக்காமையினாலும்.

இந்தக் கொடுமைகளைக் களைய எதுவும் செய்யவில்லை இந்த சர்க்கார் — ஐந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தும்.

கொடுமைகளைத் தடுக்காது கட்டுமின்றி வளரவும் விட்டிருக்கிறது.

கேவலமான காட்சி! ஆனால் கித்தாப்போடு, வெளியிட்டிருக்கிறது, ஐந்து ஆண்டுகளில், 1800 கோடி ரூபாய்களைக்கொண்டு சாதிக்கப் போகிறேன் என்று!

ஊமை கூடச் சிரிப்பான்—இந்த வீம்பு கண்டு.

பெங்களூரில் 'கண்ணாடி மாளிகை'யில் இருந்தவாறுதான், இத்திட்டம் பற்றி ஆலோசனை செய்தனராம், காங்கிரஸ் தலைவர்கள்!

கண்ணாடி மாளிகை!—அதுவும் அந்திய காலத்தில்!!

பரிதாபம் வருகிறது நமக்கு.

ஆனால் படாடோபத்துட[ன்] பார்க்கிறார்கள் மக்களை—புது ஜால[த்]தோடு.

புது ஜாலத்துக்கு மயங்க, மக்க[ள்] ஒன்றும் பொம்மைகளல்ல. மய[ங்கி] மிட்டாயை எண்ணி, திருடனோ[டு] சொல்லும் சிறு பாப்பாக்களுமல்[ல].

இதைக் கூடப் புரிந்து கொள்[ள] வில்லையே—இவர்கள்.

பாபம்! கலக்கம் கண்ணை மட்[டு]மல்ல கருத்தையும் மறைக்கிற[து] போலும்!!

★

சமூக சீர்திருத்த மாநாடு

ஈரோட்டில் 5—8—51 அன்[று] நடைபெறும். தலைவர்: ஏ. கே[.] வேலன் திறப்பாளர்: ப. உ. சண்முகம், தி. மு. கழக முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கொள்[வ]வர். இரவு, சந்திரமோகன் நாடக[ம்] நடைபெறும். திருச்சி லோகநாதன் இன்னிசை உண்டு. மாநாட்டுக் கட்டணம்:- வரவேற்பாளர் ரூ 5. பிரதிநிதி ரூ 2. பார்வையாளர் ரூ 1. பெண்களுககு அணா 8.

வருந்துகிறோம்

நம் பணிமனைத் தோழர் வே. சம்மந்தன் அவர்களின் சகோதரர் லோகநாதன் 13—7—51ல்இயற்கையெய்திய செய்தி கேட்டு வருந்துவதுடன், பிரிவால் வாடும் அவர் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுகிறோம்.

15—7—51 ஞாயிறு மாலை 6-30, மணி முதல் தினசரி

நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமியும், குழுவினரும் நடிக்கும்

துளிவிஷம் நாடகம்

டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி எழுதியது

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் ஞாயிறு, புதன், வெள்ளி மாலை 6-30 மணிக்கும் திங்கள், செவ்வாய், வியாழன், சனி இரவு 9-30 மணிக்கும்.

டிக்கட்:- ரூ. **3-0-0, 2-4-0, 1-8-0, 0-12-0, 0-6-0.**

தினசரி காலை 9-முதல் மாலை 5-மணி வரையில் தியேட்டரில் முதல் இரண்டு வகுப்புகள் இலவச ரிசர்வேஷன் செய்யப்படும் இரவு நாடகம் முடிந்துபோக பஸ் வசதி உண்டு.

(A) ஆர்கனைசர் ஏ. ஆர். பி.

காங்கிரஸ் அலங்கோலம்

★

யா!

அரிசி கிடைக்காமல் மக்கள் பிண
கிக் கொண்டிருக்கின்றனர்.

வாங்க முடியாமல், பணம் கிடைக்
மல், பட்டினிச் சாவால் சுடுகா
ரகிக் கொண்டிருக்கிறது.

ஆனால் இந்த கண் முன் னே
டக்கும் காட்சிகளைக் கண்டு வரும்
ங்கிரஸ் சர்க்காரோ, அரிசியின்
லையை மீண்டும் உயர்த்தியிருக்
றது— இவ்வாரத்தில்.

சென்னை படி ஒன்றுக்கு அரிசி
ன் விலை அரையணாவாகவும்,
காதுமையின் விலை மூன்றே
லணாவாகவும் உயர்த்தப்பட்டி
ருக்கிறது.

இந்த விலை உயர்வுக்குக் காரணம்
ல்லி சர்க்காராம்.

கொதிக்கும் குந்தியில் எண்ணெய்
ற்றுகிறார்கள்! நடமாடும் பிணங்
ளைச் சுடுகாட்டிலே புதைக்க
ற்படுகிறார்கள்!!

வேதனை! தாங்க முடியாத
பெரும் சுமை!

இதுவா, பொதுஜன சர்க்கார்?
இதையா மக்கள் ஆதரிப்பர்?

ஆளும் திறமையற்ற காங்கிரஸ்
ராண்டல்' ஒழிந்தாலன்றி நாடு—
ருப்படாது. தேறாது.

தொழிலாளர் தோழர்கள்!

தொழிலாளர்களுக்குத் தொண்டு
செய்வதிலே, பண்டுதொட்டு இன்று
வரை தலைதூக்கிநிற்பது காங்கிரசே
தான்! ஏழைத்தொழிலாளி வயிறார
உண்ணத்தானே ரேஷன் அரிசியை
பாவரக் குறைத்து வருகிறார்கள்!
அதுமட்டுமா? விலையையும் ஏற்றி
யிருக்கிறார்கள்!

தொழிலாளத் தலைவர்களைமட்டும்
விட்டு விடுவார்களா, என்ன! அவர்
களையும் பிடித்து தண்டிக்காமல்
போவார்களா! அந்தோனிப்பிள்ளை,
பக்கிரிசாமி, இன்னும் ஐவரையும்
அபராதம் கட்டச் செய்துவிட்ட
னர். அவர்கள் சென்னை தொழிலா
ளர் யூனியன் தலைவர், செயலாளர்,
செயற்குழுவினராக இருந்தார்களே
—அதற்காகத்தான்! குற்றம் என்ன
தெரியுமா! அவர்கள் பி அண்ட் ஸியில்
தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்
குக்காரணமாக இருந்தார்களாம்!
என்ன கருணை, எத்துணைகொண்டு
புரிகின்றனர், தொழிலாளர்
களுக்கு!

நன்மையோ நன்மை!

காங்கிரசாட்சியில். தொழிலாளர்
களுக்கு நன்மைக்குமேல் நன்மை
செய்து திணறடித்து வருகிறார்கள்!
தொழிலாளர்கள் நன்மைபளுவைத்
தாங்காமல் தவிக்கிறார்கள், போங்
கள்! ரயில்வே ஸ்ட்ரைக் வரப்போகி
றது என்றவுடன் என்ன செய்தார்
கள், தெரியுமோ! கேட்ட குறை
களை, கிடு கிடுவென நீக்கி, கோரிக்
கைகளை மடமடவென நிறைவேற்றி
விட்டார்கள் என்று எண்ணிவிடா
தீர்கள்! உடனே ஒரு அவசரச் சட்
டம் கொண்டுவந்துவிட்டார்கள்.
ஆறுமாதத்திற்கு அமுலிலிருக்கு
மாம், பிறகும் நீடித்துக்கொள்ள
லாமாம். இதன் துணை கொண்டு
வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிடு
பவர்களை கைது செய்யலாம், சிறைப்
படுத்தலாம், எல்லாம் செய்யலாம்!
அப்பாடா, காங்கிரசாட்சியில், நன்
மைகளை, நன்மையோ நன்மை
யென்று கூவிக் கூவியல்லவா ஏலம்
போடுகிறார்கள்!

நூற்றுப் பதினொன்று!

தொழிலாளர்கள் என்ன நினைத்
துக் கொண்டிருக்கிறார்கள்! அது
வும் இந்த ரயில்வே தொழிலாளர்
கள் மகா மகா 'மோசம்! ஆமாம்!
ரயில்வே நிர்வாகம் யார் கையிலிருக்
கிறது! கோபால்சாமி அய்யங்கார்
கையில், சந்தானம் அய்யங்கார்
பையில், அதுவும் 'தக்ஷிணரயில்வே'
ராமானுசம் அய்யங்கார் தலைமையில்!
என்ன குறைவு! கனம் சந்தானம்
கூறிவிட்டாரே. 1951—52ல் இந்த
தொழிலாளர்களுக்கு 111 கோடி
செலவிட திட்டமிடப்பட்டுள்ள
தாம்! நூற்றுப் பதினொன்று இவர்
களுக்கு போட ஏற்பாடாகியும்
ஏன் இப்படி இவர்கள் தவிக்கிறார்
கள்!

ராஜாதி ராஜா!

ஆத்துவெளி கோட்டையூர்
என்ற இடத்தில் திருட்டுச் சாரா
யம் காய்ச்சுவதாக சந்தேகித்து
மதுவிலக்கு இன்ஸ்பெக்டர் போலீ
சாருடன் சென்று சோதனையிட்ட
போது, அந்தக் கள்ள சாராயம்
காய்ச்சின ஆசாமி, கடப்பாரை
கொண்டு தாக்க வந்தானும். சப்
இன்ஸ்பெக்டர் சுட்டாராம்.
அவன் மாண்டு போனனும் — அப்
பாடா, அந்த ஆசாமி, மதுரை
ராஜாவாக இருந்து, விருதுநகர்
ராஜாவிடம் சொல்லியிருந்தால்,
ராஜபாளையம் ராஜா என்ன செய்
திருப்பார் தெரியுமா? உஸ்........
'தேனீ' பறக்கிறது!

கடவுள்களுக்கு கும்மாளம்!

காங்கிரசாட்சியில், கடவுள்களா
வது தப்பினார்களே! அவர்கள்
போன ஜன்மத்தில் புண்ணியந்தான்
செய்திருக்க வேண்டும்,...ஓ. அவர்
களுக்கு போன ஜென்மமில்லையோ,
மனித புத்தி போகுதா, என்ன!

அரிசியில்லை யென்று மனிதர்கள்
விஷயத்தில் அது தலை காட்ட
லாமோ! ஆகவே காங்கிரஸ் சர்க்
கார் கடவுள்கள் விஷயத்தில்
கருணையோடு நடந்துகொண்டுள்
ளார்கள்.

ஒரு சாமிக்கு, வேளைக்கு ஆறு
அவுன்ஸ் அரிசி! இது எப்பொழு
தும் மாறாது! சொந்த நிலமிருந்தா
லும் இந்த ரேஷன் உண்டு. இது
அரிசியாகவேதான் தரப்படும். தின
மும் அபிஷேகம், பூஜை முதலிய
வைகள் செய்யப்படும் சாமிக்கே
இந்த ரேஷன் ஏற்பாடு! ஏன்? கட
வுள்கள் காலை டிபனுக்கு, பூரிபோட்
டுக்கொண்டு தவிக்க வேண்டிய
தில்லை. இட்டிலி, தோசையே,
போட்டுச் சாப்பிடலாம். மனிதர்கள்
வாழமுடியாது. மகேசன் பரம்பரை
வாழலாம்! இதுதான் காங்கிரஸ்
அலங்கோலம்!

கடவுள்கள் கும்மாளம் போட
வழி காட்டுவார்கள்! கடவுள்கள்
பெற்ற குமாரர்களான மக்களுக்கோ
வழி காட்டாதது மட்டுமல்ல, அவர்
களின் வாழ்வைப் பறிப்பார்கள்!
இதனைத் தான் அவர்களாட்சியில்
தினந்தினம் கண்டு வருகிறோம்

✲

திராவிடநாடு

ஞாயிறு] 22—7—51 [காஞ்சி

கண்ணீர்த் துளி

வீண் போகாது!

டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேனிக்குச் சென்றார்.

மாஜிட்ரேட், இன்ஸ்பெக்டர், சப் — இன்ஸ்பெக்டர், ஹவில்தார் மேஜர் ஆகியோர் சஸ்பெண்ட் செய்யப் பட்டனர்.

அவர்கள், கடமையில் தவறினர்- கடமைக்குப் புறம்பானவற்றைச் செய்தனர்.

* * *

இந்த நடவடிக்கை நம்மை மட்டுமல்ல நாட்டிலுள்ளோரை திடுக்கிட வைத்தது!

இந்த அதிகார வெறியின் ஆர்ப்பரிப்பை நம்மால் சகிக்க முடியவில்லை.

நல்லறிவாளர்கள் அனைவரும் எதிர்த்துள்ளனர்! அன்பர் பி. பா. இதனைக் கண்டித்து, இந்திய ஜனாதிபதிக்கு தந்தி கொடுத்துள்ளார். மற்றொரு இடத்திலே அதை வெளியிட்டுள்ளோம்.

தினந்தினம் தேனி சம்பவத்தைப் பற்றி சர்க்காரின் எதேச்சாதிகார நடவடிக்கையை எதிர்த்துத் தீர்மானங்களை அனுப்பியபடியுள்ளன பல கழகங்கள்.

நாட்டில் உள்ள நம் கிளைக்கழகங்கள் எல்லாம் பொதுக்கூட்டங்கள் கூட்டி, தேனி நிகழ்ச்சியில், சென்னை ஆட்சியாளரின் கோணல்போக்கை விளக்கியுள்ளன.

கட்சி, கருத்து வேறுபாட்டு எல்லையைத்தாண்டி நின்று நாட்டினர் அனைவரும் சர்க்காரின் போக்கைக்கண்டித்துள்ளனர்.

இதயத்தில் நேர்மைக்கு அரியாசனம் அமைத்துள்ளோரா, 'தேனி' கண்டு திகைப்பதும், அதில் சர்க்காரின் நடவடிக்கை கண்டு, திகைப்பும் அதிர்ச்சியுமதான் அடைந்துள்ளனர்.

தேனியில் நடந்த காலிகள் திருவிளையாடலை முன்னரே விளக்கியுள்ளோம்.

அந்தக் குண்டர்களின் கோர வெறியாட்டத்தை நிறுத்த போலீசார் நடவடிக்கை எடுத்தனர். நிலைமை சமாளிக்கப்பட்டது. குழப்பம், கலவரமாகி, கலவரம் யுத்தமாகாமலே முடிந்தது!

* * *

அவர்கள் கடமை என்ன? அமைதியை பாதுகாப்பதுதானே! அவர்கள் அன்று அமைதியை நிலைநாட்டினரே!

அவர்கள் கடமைக்குப் புறம்பாக, குழப்பத்தை வளரவிட்டனரா, கலவரத்தைப் பெருக்கினரா, இல்லை!

ஆம், போலீசாரின் திறமையான முன்னேற்பாடில்லையென்றால், தேனியில் இரத்த வெள்ளம் புரண்டிருக்கும் — பிணமலைகளை காட்டியிருப்பர் காலிகள்.

அந்த பயங்கர நிலையைப் படாதுபாடுபட்டுத் தடுத்தனர் போலீசார்.

அதுவும் மிகக் குறைந்த கெடுபிடியை உபயோகித்தேதான், அமைதியை நிலை நாட்டினர்!

தடியடி, போலீசாரின் ஆரப்ப ஆயுதம் — அத்துடனேயே அமைதியை பாதுகாத்துள்ளனர்.

தடியடி கூட பலமான முறையில் நடைபெற்றதாகத் தெரியவில்லை. அடிபட்டோரின் பட்டியல் கூட வெளியிட முடியாத அளவு குறைந்த அளவில்தான்! அடிபட்டவர்கள் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல, நம் கழகக் காளைகளும் உண்டு!

தடியடிதான் நடந்தது!—அங்கு கண்ணீர்ப் புகையில்லை, துப்பாக்கி வேட்டு சத்தமும் கேட்கவில்லை! ஊரடங்கு சட்டம் போட்டு, ஆர்ப்பாட்ட புரியினராகவும் திரிந்திடவில்லை.

அவர்கள் தங்கள் கடமையை அதிக 'கெடுபிடி' கூட இன்றி நிறைவேற்றியிருக்கின்றனர்!

கலவரம் நடந்த இடத்திற்கு ஜில்லா அதிகாரி, கலெக்டர் சென்று போய்ப் பார்த்திருக்கிறார். போலீசாரின் திறமையைப் பாராட்டியிருக்கிறார். கலவரத்தை அவர்கள் அவ்வளவு எளிய முறையிலே சமாளித்ததற்காகப் பெரிதும் மகிழ்ந்திருக்கிறார்!

இதனை சர்க்கார் கண்டு, கலவரத்தை தக்கநேரத்தில், நடவடிக்கை எடுத்து சமாளித்த அதிகாரிகளைப் பாராட்டியிருக்கவேண்டும்.

ஆனால் நடந்தது வேறுவிதமாக — வெகு விநோதமாக! விபரீதமாக!

காமராஜர், குமாரசாமி ராஜாவை பார்த்தார். அவரோ, போலீஸ் ஜெனரலைப் பார்த்தார். போலீஸ் ஜெனரலோ டெபுடி ஜெனரலை பார்த்தார் — முடிவில் சஸ்பெண்ட் செய்யப்பட்ட அதிகாரிகளை, நாமு நாடும் வியப்போடு பார்க்கிறோம்!

அதிகாரிகள் தங்கள் கடமையை செவ்வனே செய்திருக்கின்றனர் ஆனாலும் அவர்கள் மீது அக்கிரமமான நடவடிக்கை எடுத்திருக்கிறது இந்த காங்கிரஸ் ஆட்சி!

இதனைக் கண்டு ஜனநாயகம் தலை குனியத்தானே வேண்டும்!

தேர்தல் நெருங்குகிறது — காங்கிரஸ் வெறி உச்ச நிலையடைகிறது.

சர்க்கார், ஓரவஞ்சனை, ஒரு சார்பு தீர்ப்பளித்திருக்கிறது.

அதிகாரிகளை இப்படி மிரட்டி உருட்டினால், காங்கிரஸ் காலிகளின் ஆர்ப்பாட்டம் வளரத் தான் வழி பிறக்கும்!

ஜனநாயக சர்க்காரில் நடக்கக் கூடிய காரியமா இது! தம் கட்சித் தோழர்களின் 'தடித்தனத்திற்காக' தாறுமாறாக ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்களையெல்லாம் அலைக்கழிப்பது! இது அக்கிரமம், சகிக்க முடியாத அநியாயம்!

அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்துவிட்டனரே? அவர்கள் செய்தவை தவறானவை யென்று நீதி மன்றத்திலல்லவா முடிவு செய்யப்படவேண்டும். அதிலே நிரூபிக்கப்பட்டால், வேண்டுமானால் சர்க்கார் தலையிட்டிருக்கலாம் பிறகு நடவடிக்கை எடுக்கலாம்.

காமராசர் வந்தார் — உடனே ஆட்சி பீடம் அலை மோதுகிறது என்றால் இது கேவலமான காட்சி!

அதிகாரிகள் கடமை தவறினர் என்று கூறுகிறது சர்க்கார் — கடமைக்காக போராடியவர்களைப் பார்த்து! ஆனால் அதே நேரத்தில் தன் கடமை எது என்று கூட தெரியாமல், திடீர் தாக்குதலை நடத்தியிருக்கிறது, அதிகாரிகள் பீது!

இந்த நிலை வளர்ந்தால் என்ன ஆவது! ‘ஜனநாயகம்’ பேசுவோரே ‘தர்பார்’ ஒரு பக்கம் நடத்துவதும், மறைமுகமாக வேறுபலரைத் தூண்டிவிடுவதுமான வகையிலும் ஈடுபடுவதை எந்த சர்க்காரிலும் காணமுடியாத கொடுமை.

இந்த நடவடிக்கையினால் சர்க்காரின் ‘ஜபர்தஸ்து’மட்டுமா தெரிகிறது, ‘இந்த ராஜா, அந்த ராஜாவின் உருட்டுபொம்மை’ என்றல்லவா கேலி பேசச்சொல்கிறது!

ஆட்சித் தலைவர், கட்சித் தலைவருக்கு அடங்குகிறார். கட்சித் தலைவர், ஆட்சித் தலைவரை ஆட்டிவைக்கிறார். இது கூட நமக்கு கவலை தரவில்லை. இவர்கள் இருவர் ஆடும் ஆட்டத்தின் உருட்டு காயாக, இந்த நாடு சிக்கியுள்ளதே என்பது தான் நம் கவலை!

இப்படி, அதிகாரிகளை மிரட்டினால், அவர்களின் நேர்மைக்கு இடம் எங்கே? காங்கிரஸ்காரர்கள் எதைச் செய்தாலும், வாய் மூடி மௌனியாகி, கரங்கூப்பிசிரம் வணங்கவேண்டியது தானே!

*   *   *

தொல்லைகள் நம்மைத் தேளெனக் கொட்டும் பொழுதெல்லாம் கண்ணீர்த் துளிகளைத் தான் காணிக்கையாக்கியிருக்கிறோம்.

குருதி கொட்டும் சந்தர்ப்பங்கள் ஏராளம், இந்தக் குறைந்த வயதிலேயே, நம் கழகத்திற்கு!

நாம் குருதிச் சொட்டுகளைச் சிந்துகிறபொழுதெல்லாம், மக்கள் கண்ணீர்ச் சொட்டுகளைச் சிந்தினர்.

நீதிக்கு நாம் போராடுகிறோம் என்கிற பொழுது, நேர்மையாளர்கள் கண்ணீர்த்துளிகளையே நமக்கு ஆறுதலுரையாக அனுப்பியுள்ளனர்.

குழந்தைப் பருவத்திலேதான் ‘குன்றத்தூர்’ — நாம் கலங்கிவிடவில்லை! தளர்நடை தாங்கா பருவத்தில்தான் ‘நாரணமங்கலம்’ நடந்தது — தளரவில்லை.

இன்றும், ஆட்சியாளரின் அடக்குமுறை பாணங்கள் பாய்ந்த நேரத்திலெல்லாம் பயந்துவிடவில்லை.

அதுபோலவே ‘தேனி’ கண்டு திடுக்கிடவில்லை—திகைக்கவில்லை.

கண்ணீர்த்துளிகளிலே நாம் பிறந்தோம் — கண்ணீர்த்துளிகளிலே நாம் வளர்கிறோம்.

குருதிச் சொட்டுகளுடன், கண்ணீர்த் துளிகளும் சேர்கிறது, அடிக்கடி!—இது ஆணவக்காரர்களுக்கு அபாய அறிவிப்பு!

கண்ணீர்த்துளிகள் எப்பொழுதுமே வீண் போனதில்லை—அதுவும் கண்ணியர்கள் சிந்தும் கண்ணீர் பாழாகியதேகிடையாது.

ஏழைகள் சிந்திய கண்ணீர்தான், பிரஞ்சுப் புரட்சியை நடத்தியிருக்கிறது! ஆகவே கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்கிடுகிறோம்.

கண்ணீர்த்துளிகள் — ஆணவக்காரர்களின் அறியாமைக்கு, ஆர்ப்பாட்டக்காரர்களின் கோணங்கித் தனங்களுக்கு, இரங்கல்பா பாடட்டும்!

தேனி, நமக்குமட்டுமல்ல, நாட்டில் உள்ளோர் அனைவருக்குமே ஒரு எச்சரிக்கை.

ஜனநாயகத்தின் தோல்வி—எதேச்சாதிகாரத்தனத்தின் வெற்றிமுழக்கம் ‘தேனி.’

தேர்தல் வருமுன்னே, இப்படித் ‘தலைவர்கள்’ தர்பார் நடக்கிறதென்றால் தேர்தலில் காங்கிரசார் எப்படி நடந்துகொள்வர் என்பதற்கு எடுத்துக்காட்டு ‘தேனி’!

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டோர் எல்லோருமே இதனை எடுத்துக்காட்ட வேண்டும்.

நம் கழகத் தோழர்கள், நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் கூட்டி, தீர்மானங்கள் நிறைவேற்றி, ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத், இந்தியப் பிரதமர் நேரு, சென்னை முதலமைச்சர் ஆகியோருக்கு தந்தி, தபால் மூலம் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

கழகத் தோழர்கள் மட்டுமல்ல, மக்களாட்சியின் மாண்புணர்ந்தோர் அனைவருமே இந்த ‘தேனி’ திரும்பாதிருக்க இப்பொழுதே அணைபோட அழைக்கிறோம்.

‘தேனி’ நமக்கு மட்டுமல்ல, காங்கிரசைச் சேராதோர் அனைவருக்குமே தேள்தான்—இதனை நினைவிலிறுத்திச் செயலாற்ற வேண்டுகிறோம்.

நாட்டு நலம் விரும்பிகள், மக்களாட்சியின் மகத்துவமறிந்தோர், மனித உரிமையின் பெருமை புரிந்தோர், எதேச்சாதிகாரத்தின் இன்னலைத்தெரிந்தோர் அனைவருமேகூடித் ‘தேனி’ திருவிளையாடலைக் கண்டிக்க வேண்டுகிறோம் — ஏன்? நமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே அல்ல—நீதி இதிலிருக்கிறது என்பதை நாட்டுக்குத் தெரிவிக்கவே! சென்னை ஆட்சியாளரின் அக்கிரம போக்கை, அதிகாரிகளை ஆட்டுக் குட்டிகளாக்கி, தம் பக்கம் ஆடச் செய்யும் அலங்கோலத்தை விளக்க!

ஆம், நாம் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்கி, அது வீண் போகாது என்ற நம்பிக்கையை ஒளி விளக்காகக் கொண்டு கடமை பாதையிலே நடந்து கொண்டேயிருப்போம்.

தோழர் நெடுஞ்செழியன்

தேனி கலவரம் சம்மந்தமான முழு தகவல்களையும் சேகரித்துக் கொண்டு, பொதுச் செயலாளரோடு கலந்து பேசி, அடுத்துச்செய்யவேண்டிய காரியங்களைப் பற்றி ஆலோசித்து முடிவுக்கு வர, பிரச்சாரக் குழுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் எம், ஏ. 19—7—51 காலை காஞ்சிபுரம் வந்திருந்து அன்று மாலை மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

★

திருச்சியில்

நெசவாளர் மாநாடு

மிக விரைவில் கூட பெறும்

காஞ்சியில் கலைவிருந்து

தி. மு. கழக உதவி நிதிக்காக

காஞ்சி அசோகா தியேட்டரில்

27—7—51

வெள்ளி இரவு

10-30 மணிக்கு

வாழ முடியாதவர்கள்

மு. கருணாநிதி
கண்ணதாசன்
புலவர் குழந்தைபாச
அழத்தடிகள்
அரங்கண்ணல்
தில்லை-வில்லாளன்
சி. வி. எம். அண்ணாமலை
கே. டி. எஸ். மணி
ஆர். கே. மூர்த்தி
வெ. சம்மந்தன்
சபாபதி
செ. கோ. பெருமாள்
எம். என். கிருஷ்ணன்
மகாலிங்கம்

மற்றும் பலர் நடிக்கின்றனர்

கதை, வசனம் மு. கருணாநிதி

அரிய சந்தர்ப்பம்!

நல்ல வாய்ப்பு!

வாழ வழியிருந்தும் வாழ முடியாது தவித்திடும் பாழும் சமூக சர்ப்பங்களை பின்னிக் கோர்த்த பந்தம் புதிய சித்திரம் இது.

காணத் தவறுதீர்கள்!

கண்டு களியுங்கள்!

டிக்கட் விவரம்:—

ரூபா, 5, 3, 1—8—0, அணா 8.

விசாரணை செய்க!

'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் தோழர் பி. பாலசுப்ரமணியம், இந்திய ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு அனுப்பியுள்ள தந்தியின் சுருக்கம்:—

காங்கிரஸ் காரர்கள், தேனியில் கைது செய்யப்பட்டார்கள் என்பதை தாங்கள் அறிந்திருக்கலாம்.

கலவரம் நடந்த உடனேயே காமராஜ நாடார் சென்னைப் பிரதமரைக் கண்டார். அடுத்த கணத்திலேயே, சென்னை சர்க்கார் டேபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலை போலீஸ் அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையைப் பற்றி விசாரித்துவா உத்திரவு பிறப்பித்தது. அவர் அறிக்கைப்படி, காங்கிரஸ் காரர்கள் மீது நடவடிக்கை எடுத்த, சப்மாஜிஸ்ட்ரேட், போலீஸ் அதிகாரிகளும் சஸ்பெண்ட் செய்யப்பட்டு விட்டார்கள்.

அந்த வழக்கு முழுவதும் நீதி மன்றத்திற்கு வந்து, விசாரணை நடந்து, கைதி செய்யப்பட்டவர்கள் அனைவரும் குற்றவாளிகளில்லை யென்று தீர்ப்பளிக்கப்பட்டு, போலீசார் நடந்து கொண்ட முறையே மோசமானது என்று நிரூபிக்கப்பட்டால், சர்க்கார் தலையிடுவதும் நடவடிக்கை எடுப்பதுந்தான் சாதாரண முறை!

ஆனால், இன்றைய நடவடிக்கை, நாஜி முறையைவிட மோசமானது.

சர்க்காரின் இந்த எதேச்சாதிகார நடவடிக்கை, சட்டவரம்பை மீறி, எந்தக் குற்றத்தை காங்கிரஸ்காரர்கள் செய்தாலும், போலீசாரோ, மாஜிஸ்ட்ரேட்டோ எத்தகைய நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்ற எண்ணத்தைத்தான் உண்டாக்கும்

வரும் பொதுத் தேர்தலில், காங்கிரஸ் காரர்கள் மிருகத்தனமாகவும், பலாத்காரமாகவும் வெற்றி பெற முயல்வார்கள் என்று பொதுமக்கள் பயப்படுகிறார்கள்.

மகாத்மா காந்தியாரை உண்மையில் பின்பற்றுபவரானால், கட்சிகளைக் கடந்தவரானால், சென்னை காங்கிரஸ் சர்க்காரின் போக்கு சரியா என்பதை விசாரித்து பொது மக்கள் மனதில் நம்பிக்கை நிலைக்கச் செய்யவேண்டும்.

தொடர்கதை

யாத்திரை

தில்லை-வில்லாளன்

[ஓடிய கதை'— சுந்தரம், தன் கல்லூரித் தோழி பத்மாவைக் காதலித்தான். அவள் பெற்றோரின் வற்புறுத்தலால் பார்த்திபன் என்ற வாலிபனை மணந்துகொண்டாள். சுந்தர் தோற்றுவிட்டது. ... அந்தத் திருமணத்திற்கு வர முடியாது வாழ்த்து மட்டும் அனுப்பினான் பத்மாவின் தங்கை, லீலாவின் இளந்தோழி மங்கை. அவள் வாழ்விலேயும் ஒரு புயல்...தெப்ப உற்சவம் பார்க்கச் சென்ற இடத்தில் இனகரனைச் சந்திக்கிருள். அவனே அவளை வஞ்சித்து விட்டான். அதிலிருந்து, வாழ்க்கையில் வெறுப்புற்று ஆசிரியையாகவே இருந்துவந்தாள்.

பார்த்திபனை மணந்த பத்மா தன் வாழ்வில் சுந்தர் நினைவால் படுந்துயர் தாங்காமல் தவித்தாள். மேலும்........]

3

அம்மாவுக்கு

பத்மா

முதல் தடவை அவரும் என்னுடன் வந்திருந்தார். அவரைச் சுந்தர் அறிவாரோ என்னவோ எனக்குத் தெரியாது. அந்தத்தடவை ஏதோ ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த பொழுது சுந்தரைப் பார்த்தேன் அவ்வளவுதான்; நூறு பாட்டுகள் பாடிட வேண்டிய அம்பிகாபதி, தவறான எண்ணிக்கையால் முன்னரே ஓடிவந்த அமராவதியைக் கண்டு நூறாவதுபாட்டால், சிற்றின்ப ரசம் சொட்டச் சொட்ட அவளைப் பற்றியே பாடினாரே, அப்படி என்னைப் பற்றியே சிலேடைபாகப் பேசிவிட்டிறங்கிவிட்டார். அவர் மனதார என்னைத் திட்டினாலும்கூட நான் பொறுத்துக் கொள்ளத் தயாராக இருந்தேன். அதனால் அவருக்கு மனநிம்மதி கிடைக்குமானால் நான் மகிழ்ச்சியடைவேன். அவர் என்னைக் கண்டு பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஏமாந்தேன். வழக்கமான வேடிக்கை வார்த்தைகளில் அவர் தன் நண்பரிடம்...... வந்தனள் ஒரு சுந்தரித் திருமங்கை போலொரு மாது, வந்தென் இதயத்தைக் கீறி ஓடுகிறாள் பாரு...... என்று கூறிக்கொண்டு சென்றது. காற்றிலே கலந்து என் செவிகளை வந்தடைந்தது.

மற்றொரு முறை புகை வண்டி நிலையத்தில் திடீரென சுந்தரைப் பார்த்தேன். என் கண்கள் ஆவலால் அகலமாயின. அவர் என்னைப் பார்த்தார். பேசவில்லை. பேசினால் என்ன? ஒரு பெண் எப்படித் தானே முந்திக்கொண்டு பேசுவது? இது பெரிய இலக்கிய கர்த்தா, 'கலியுக பிர்மா'வுக்குத் தெரியாதா?...ஆனால் என்னிடம் எதைப் பேசுவார்? நான்தான் என்ன பதில் கூறுவேன்? சுந்தர் என்னைப் பார்த்தார். அவர் முகம் சுருங்கிவிட்டது. அவர் கண்களிலிருந்து நீர் கசிந்தது. நிற்கவில்லை. நடந்துகொண்டேயிருந்தார். வண்டி வந்தது நான் ஏறிக்கொண்டேன். என்னுடன் என் தோழி சுகுணாவும், அவளது சகோதரனும் வந்திருந்தனர். வண்டி நகர்ந்தது. அவர் ஒரு கோடியிலே சிலை போல நின்றது என் கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது.

அம்மா, அவரின் வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவையும் அறிந்து கொள்வதிலே நான் மன ஆறுதலைக் காண்கிறேன். சுந்தர் இன்னமும் தனியாகத்தான் இருக்கிறார். அவர் இப்பொழுது மக்கள் மன்றம் என்ற புதிய கட்சியின் தலைவர் என்னை மறக்க அவர் கண்டுபிடித்த புதிய மார்க்கம் அது போலும்! எதிர்காலம் என்ற வார இதழின் ஆசிரியர். எழுத்திலே தன் எண்ணங்களை புதைத்து விடுகிறார்.

நான் மட்டும் அனலிடையே புழுவாக உயிர் வாழ்கிறேன். பார்த்திபனுக்கு முழு இதயத்தை நான் தரத் தயாராக இருந்தாலும் அவர் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையிலிருக்கிறார் போலும்! ஏன் என்று என்னைக் கேட்காதே அம்மா, உன் மருமகனையே கேள், அந்த கேள்வியை. அவர் சொல்ல வேண்டிய உண்மை அது. அவர் என்னை விரும்பவுமில்லை. விரும்பாமலுமில்லை. அவர் என்னை நேசிக்கிறார், ஆனால் முழுமனதோடில்லை!

என் வாழ்க்கையிலே புகுந்து கொண்டிருக்கும் சோக நாகத்தைக் கண்டு பிடித்துவிட தந்திர மோடி எடுத்து ஊதினேன். புரியவில்லை. தெரிவிப்பார் யாருமில்லை.

பார்த்திபன் ஏதோ ஒரு பயங்கரச் செயலைச் செய்து வருகிறார் என்று எனக்குத் தோன்றிற்று. சிறிது சிறிதாக எனக்கும் புலப்படலாயிற்று. ஆனால் இன்னமும் என்னால் நம்ப முடியவில்லை. நம்பினால் என்னது தயார் இரட்டிப்பாகும். இருந்தாலும் அவரது நடவடிக்கைகளைக் கண்காணித்தேன். கண்டு பிடித்துவிடலாம், அவரது மறைவுக் கூத்தை என்ற நம்பிக்கையிலே!

ஒருநாள் மாலைப்பொழுது அவர் நீதி மன்றத்திலிருந்து திரும்பி வரும் நேரம்...நான் அப்பொழுது தான் குளித்துக்கொண்டிருந்தேன். வெளியில் கார் வந்து நின்ற ஓசை கேட்டது. நான் அவசர அவசரமாகக் குளித்து முழுகிவிட்டு, உடுத்திக்கொண்டு அவர் இருக்கும் அறையினுள் நுழைந்தேன். என் காலடி யோசைகள் கேட்டவுடனேயே ஏதோ பரபரப்பு அங்கு ஏற்பட்டிருக்க வேண்டும். என்னைக் கண்டவுடன் பொன்னி திரு திருவென விழித்தாள். அவரும் தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

"என்னை மன்னியுங்கள்...நீங்கள்

வரும்பொழுது குளித்துக்கொண்டிருந்தேன்...இன்னும் காபி சாப்பிடவில்லையே!"

"இல்லை பத்மா, பொன்னி தந்தாள்!" என்றார் அமைதியாக!

"அவ்வளவு சோர்வோ...?"

"ஆம்......"

என் கண்கள் பொல்லாதவை, அவர் மடியில் கிடந்த மல்லிகை மலர்களைப் பார்த்துவிட்டன. திரும்பினேன். அப்பொழுதுதான் அறையைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்த பொன்னியின் கூந்தலில் சூடிய மல்லிகைச் சரத்தையும் பார்த்தேன். என் மூளை வேலை செய்தது. என் நரம்புகளில் முறுக்கு ஏற்பட்டது. இரத்தம் கொதித்தது. அப்படி இருக்குமா?......அவளின் கூந்தலிலிருந்த மலர் அவர் மடிக்கு எப்படிப் போகும்?...என் களங்கமில்லாத நெஞ்சத்தில் களங்கம் ஏற்பட்டுவிட்டது!

பிறகு ஒரு நாள்......பொன்னி என் மாமனாரிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். எட்டிப் பார்த்தேன். அந்தக் கிழவரின் காலடியில் அவள் உட்கார்ந்திருந்தாள். அவளது கண்கள் நீரைச் சொரிந்தபடி இருந்தன. அவர் தன் மேல் துண்டால் அவளது கன்னங்களில் வழிந்தோடும் நீரைத் துடைத்தார். தேம்பும் அவளுக்குத் தேறுதல் மொழிகள் கூறினார். என் காதுகளில் அவை தெளிவாக விழவில்லை.

இரண்டொரு தினங்களுக்கு முன்னால்தான் உண்மையை உணர்ந்தேன். அவள் அவரது அறையைக் கூட்டிவிட்டு வெளியில் வந்தாள். அவள் பொட்டுக் கலைந்திருந்தது. நான் உள்ளே சென்றேன். எனக்குச் சிரிப்பும் வந்தது, ஆத்திரமும் பொத்துக்கொண்டு வந்தது. அவரது கன்னத்தில் குங்குமப்பொட்டிருந்தது நான் ஒன்றும் பேசவில்லை அவர் அருகில் சென்றேன் அவசர அவசரமாக! கன்னத்திலிருந்த பொட்டைத் துடைத்தேன். அவர் விழித்தார்.

என் கண்களில் குபுகுபுவென நீர்வந்தது. என் அறைக்கு ஓடிவிட்டேன்.

o

அவர் வந்து வெகுநேரம் நின்றார். நான் திரும்பியும் பார்க்கவில்லை. போய்விட்டார்.

பொன்னி வந்தாள். என் தலையை வருடினாள். தேம்பும் என்னைத் தேற்ற முனைந்தாள். அவளைக் கண்டவுடன் எனக்கு அழுகை அதிகமாக வந்தது. என் அழுகைக்குக் காரணம் அவள்தானே! நான் அவர்கள் நாடகத்தின் முக்கிய நோக்கத்தை அன்று கண்டுபிடித்து விடுவது என்ற முடிவில் பொன்னியிடம் மனம் விட்டுப் பேசினேன். அதனால் பலனடைந்தேன் என்று கருதுகின்றேன்.

அவளிடம் பேசிச் சேகரித்தவை.........

சுகத்தை நோக்கி, இன்பத்தை எண்ணி, மகிழ்ச்சியைக் கருதி ஓடுகிறோம். சுகத்தையடைய ஒரே பாட்டை உண்டு; அதுதான் சோகம்! துன்பத்தின் கடைசி முனை இன்பம்! அழுகையின் முடிவு மகிழ்ச்சி! ஆம், பொன்னியும் சுகத்தைத் தேடினாள். நானும் சுகத்தைத் தேடுகிறேன். இருவரும் பெண்கள். என்றாலும் அவள் ஏழை; நான் பணம் படைத்தவள்! அவள் சுகத்தை அனுபவிக்கிறாள்—ஒரு குறை திரை மறைவில்! நான் சுகத்தைத் தேடி யாத்திரை போகிறேன். கிட்டுவதுபோல் தெரிந்தும் கிட்டவில்லை. போய்க்கொண்டேயிருக்கிறேன். சுகமும் நகர்ந்துகொண்டே போகிறது. என் செய்வது?

வறுமை, வளமை என்ற இரண்டு நிலைமைகள் உண்டு. பொன்னி—அழகி, ஆனால் ஏழை! நான்—வனப்பில் அவளைவிட மட்டந்தான். இருந்தாலும் பணம், பங்களா, 'பாண்டியாக்' இருக்கிறதே என்னிடம்! ஆகவேதான் ஏற்றத் தாழ்வுகள், மேடுபள்ளங்கள் இருக்கின்றன.

பணம் படைத்தும் பாதிவாழ்வு வாழ்கிறேன். அவள் ஏழை பெற்ற பெண்ணானாலும் முழு வாழ்வு அனுபவிக்கிறாள் என்று தெரிந்து கொண்டேன். ஒரு பெண்ணுக்கு முழுவாழ்வு எது தெரியுமா, அம்மா அவளுக்குப் பிடித்த மணாளன், அவன் இதயத்தில் அவள் ஒருவளுக்கு மட்டுமே இடம் ஒதுக்கியுள்ள காதலன் கிடைக்கவேண்டும். பொன்னிக்குக் கிடைத்து விட்டதம்மா, என்னை அந்த நிலைமைக்குப் போகாமல் தடுத்து விட்டாய், அன்பு சில சமயங்களில் எவ்வளவு பெரிய ஆபத்துக்களை உண்டாக்கிவிடுகின்றது! ஆசை கண்மூடிக் கொண்டு காரியம் செய்துவிடுகின்றது! என் கடமையுணர்ச்சி என் வாழ்வைப் பறித்துவிட்டதே.

பெற்றோர்கள் வார்த்தையைத் தட்டிநடப்பது தகாது என்று கருதினேன். அதற்காகக் காதலைத் தியாகம் செய்ததாகக்கூட எண்ணினேன். அது தற்கொலையெண்ணம் என்பது இப்பொழுது தெரிகிறது. என் காதலைமட்டும் இழக்கவில்லை. என் மனிதப்பண்பும் மடிந்துவிட்டது. என் வாழ்வின் உயிர்ப் பகுதி ஓடிமறைந்துவிட்டது. நான் வாழ்கிறேன் பிறருக்காக! ஆனால் கணத்திற்குக் கணம் செத்துக்கொண்டே இருக்கிறேன். பெண்மலர், அவள் மனதிற்கு ஏற்ற மணாளன் கிடைத்தால் நறுமணம் வீசும்; இன்றேல் நச்சு நெடியடிக்கும்! கடமை மனித நடமாட்டத்திற்கு ஒரு ஒளிவிளக்கு அதுவே பாதை என்று எண்ணிவிடக்கூடாது.

இப்பொழுது ஒளிக்காமல் சொல்லிவிடுகிறேன். என் மனதில் சுந்தர் இன்னமும் இருப்பது போலவே, அவரது இதயத்தில் பொன்னி இருக்கிறாள். அவர்கள் கூடி மகிழ்கிறார்கள் சமயங்கிடைக்கிறபொழுதெல்லாம்! நான் அவர்களுக்கு இடையூறு..........நான் இல்லாவிட்டால், இடைவிடாத இன்பம் நுகர்ந்து இறும்பூதெய்துவர். இப்பொழுதாவது உணர்ந்து கொள் தாயே, காதல் மணத்தால் எவ்வளவு அமைதியான வாழ்வு ஏற்படலாம் என்பதை!

(தொடரும்)

துரோகி?

✶

தகடூர் இரா. தமிழன்பன்
தீட்டிய நாடக நூல்

✶

விலை ரூ. 1—4—0

✶

வணிகர்க்கு 250/0 கழிவு. அனுப்பும் செலவு இனும்

விவரங்களுக்கு:

அதியன் பதிப்பகம்
தர்மபுரி (சேலம் மாவட்டம்)

★ கருப்புக் கொடி! ★

அவர், மெருகு கலையாத மோட்டாரில்! மேனி நலுங்காதவர் புடைசூழ! வளையாது, குனியாது தங்கள் வசந்தகால வாழ்வை நகர்த்துவோர் வாழ்த்துரை பகர! வந்தார்!

வந்த இடம் உட்லண்ட்ஸ்—உல்லாசிகளும், உழைப்பறியா சல்லாபிகளும், ஊர்வசி லோலர்களும், ஊர் பேர் தெரியாத விநோதப் பிறவிகளும் தினந்தினம் கூடிக்கலையும் விசித்திரபுரியல்லவா அது!

அங்கு வந்தார் — விருந்து உண்டார்—சினிமாக் கலை பற்றிப் பேசினார்—பிரிந்தார்.

அதே நேரத்தில், மக்கள் தார் ரோடுகளின் ஓரங்களில் நின்று கொண்டிருந்தனர் கால் கடு கடுக்க. போலீசாரோ, அவர்களை ஒரு இடத்தில் சேரவிடாதபடி விரட்டிக் கொண்டிருந்தனர். ஆனாலும் மக்கள் வந்தபடியே இருந்தனர்.

உட்லண்ட்ஸ் விருந்தினரை ஊரார் இப்படி ஏன் வரவேற்றனர் தெரியுமா? அவர் உல்லாச புரியினர் விருந்தினர் — ஆனாலும் மக்களின் மந்திரி யென்று நம்பப்படுவர். திவாகர் தான் வந்தார்.

7—7—51ல் திவாகர் வந்தார். அவருக்கு, சென்னைத் தோழர்கள் கருப்புக் கொடி காட்ட ஏற்பாடு செய்திருந்தனர்.

மந்திரி வருமுன்னே, போலீசார் தோழர்கள் என். வி. நடராசன், கண்ணபிரான், முனுசாமி, சி. வி. ராசன் ஆகியோரைக் கைது செய்து விட்டனர்.

பிறகு, மந்திரியார், சுகமே திரும்பியவுடன், தோழர்களை விடுதலை செய்தனர்.

என்ன விசித்திரம்! என்ன விந்தை!

மக்கள், கூண்டுக் கிளிகளான பிறகு தான் மந்திரிமார்கள் வெளியில் உலவ முடிகிறது!

வெட்கங்கெட்ட நிலைதான் இது என்றாலும் வெளியில் சொல்லாமல் இருக்க முடியவில்லை!

கருப்புக் கொடிகளை, கனம்கள் காணக் கூடாது என்பதற்காக இவ்வளவு கண்காணிப்பு! தடபுடல் நடவடிக்கைகள்!

ஆனால், கனம்கள் காணாத கருப்புக் கொடிகள் அல்ல, இங்கே நாம் காட்டவேண்டும் என்று திட்டமிட்டிருப்பது.

காங்கிரசார் இன்று கனம்களாகி விட்டாலும், இலேசுகளாக இருந்த நேரத்தில் கையாண்ட கருப்புக் கொடிதான்!

அதை மறந்தாலும், இவர்கள் பார்த்தறியாத கருப்புக் கொடியுமில்லையே நாம் காட்டமுயற்சித்தது!

திவாகரே, முன்னர் பார்த்து, ரசித்தது மட்டுமல்ல, 'நானும் திரா விட்டேனே என்று கூறவைத்த கருப்புக் கொடி!

இவர் மட்டுமா? ஹரிகிருஷ்ண மேதாப், ஆச்சாரியார் இன்னும் பலப் பலர் பார்த்தது தான்—விவரங் கேட்டதுதான்!

சென்னையிலே மட்டுமல்ல, திராவிடத்திலெங்கெங்கும் காட்டப்பட்ட கருப்புக் கொடிதான்!

இதை, கனம்கள் காணக்கூடாது என்பதற்காக சிறைப் படுத்துகின்றனர் தோழர்களை!

ஆசியாவின் ஜோதி, அகில உலகத் திருவிளக்கு, மாசிலாமணிக்கம், இந்தியாவின் பிரதமர் நேரு கூட, கருப்புக் கொடி காணக் கூடாது என்றுதான் போலீசார் நடவடிக்கை எடுத்துவிட்டனர்.

நேரு, இந்நிலையை நினைத்துப் பார்த்தால் நெஞ்சு நோகுதே என்று சோகிப்பார்.

நேரு, தங்கவயலுக்குவருவதாகத் தெரிந்ததுமே, தி. மு. க. தோழர்கள், திட்டமிட்டனர் கருப்புக் கொடி காட்ட!

15—7—51 மாலையில் தான் பண்டிதநேரு, தங்கவயலுக்கு மறுநாள் வருவதாகவும், பொதுக் கூட்டத்தில் பேசுவதாகவும் தெரிந்தது.

உடனே செயற்குழு கூடிற்று—செயற்குழு உறுப்பினர்களில் பதினெட்டுப்பேர் கருப்புக்கொடி காட்டத் தீர்மானிக்கப் பட்டது.

தோழர்கே. எஸ். கோபாலகிருஷ்ணன் தலைமையில் தோழர்கள் டி. கே. சின்னத்துரை, ஆதிமூலம், கெங்காதரம், ஆறுமுகம், இராபர்ட் வில்லியம், ஜி. ஸி. எம். சாமி, கே. ஸி. இரத்தினம், கே. எஸ். இரத்தினம், சின்னராஜன், கே. ஸி. சுப்ரமணி, கோவிந்தராசன், பூசாமி, செல்லப்பன், ராஜகோபால், கண்ணன், நாராயணசாமி, கோபால் ஆகியோர் கருப்புக் கொடி காட்ட உறுதி யெடுத்துக் கொணடனர்.

அன்றே நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் தில்லை-வில்லாளன், சின்னத்துரை இந்த தீர்மானத்தை விளக்கினர்.

கழக நிலையத்தில் கூடியிருந்த நேரத்திலே போலீசார் இரவு 10-10 மணிக்கு தோழர்கள் பதினெட்டுப் பேரையும் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

தங்கவயலில் மறு நாள் பண்டித நேரு பவனி வருகிற நேரத்தில், நம் தோழர்கள் காராக்ருகத்தில் கிடந்திருப்பர் பொது மக்கள் மட்டும் ஆச்சரியத்தோடு பார்த்திருப்பர்.

சுதந்திரம், சுதந்திரம்என்றனரே, இதோ தன் சொந்த எண்ணத்தை எடுத்துக் காட்டக் கூடாதென பதினெட்டுப் பேர் சிறையிலிருக்கின்றனரே என்று தானே எண்ணுவர்.

நேருவுக்கு, கருப்புக் கொடி புதிதல்ல! அவர் இந்தோனேஷியாவில் காண வில்லையா? கண்டார்.

தங்கத்தின் ஒளியை மட்டும் பார்த்தால் மட்டும் போதுமா? அதனை பயங்கரச் சுரங்கங்களில் தங்கள் வாழ்வையே [illegible]

மாநில மாநாடு

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டுக்கான ரசீதுப் புத்தகங்கள் மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டன.

மாநாடு சம்பந்தமான முதல் சுவரொட்டி சென்னையில் இரு நிறங்களில் அச்சாகிக் கொண்டிருக்கிறது.

T. N. Parangusam
News Agent
Kulitalai

வைத்து வேலை செய்யும் சுரங்கத் தொழிலாளியின் மேனி கருப்பையும் தான் பார்க்கவேண்டும்!

கருப்பைக் காணாமல் தடுத்து விட்டதாக ஆட்சியாளர் கருதலாம்—ஆனால், இந்த சேதி நேருவுக்கு அறிவிக்கிறபொழுது, அவர் முகத்திலே இருளடையாதா? அந்தக் கருப்பு போதுமே! அதைக் காண்கிற ஆட்சியாளர்களின் இதயத்திலே புகையடையுமே, அந்தக் கருப்பு போதாதா!

தோழர்களை அடைத்து வைத்து விடலாம் — ஆனால், அவர்கள் எண்ணத்தில் கருப்புக்கொடி காட்டுவது என்று முடிவேற்பட்டதே, அதனை யார் மாற்ற முடியும்? நினைத்துப் பார்க்கட்டும்.

கருப்புக்கொடிகளைக் காணாது செய்து விடுவதால் மட்டும், மக்களிடம் வளர்ந்து வரும் வெறுப்பை மறைத்துவிட முடியுமா?

கருப்புக்கொடி காட்டுவது, உலக நாடுகளால், ஒப்புக்கொள்ளப்பட்டு, நடைமுறையில் பல நேரங்களில், பல இடங்களில் செயலாக்கப்பட்ட, அடிப்படை உரிமை!

கருப்புக்கொடி காட்டவிடாமல் தடுப்பதால், ஆட்சியாளரின் ஆணவம் புரிகிறது—சரி, அதே நேரத்தில் அலங்கோலமும் தெரிகிறதே மறக்கவேண்டாம்.

கருப்புக் கொடி திவாகர் பார்க்காமலிருக்கலாம் — நேருவின் கண்களில் படாமலிருக்கலாம். ஆனால், அந்தக் கொடி சொல்ல நினைத்த சேதியை நாட்டு மக்கள் அறிவார்களே! நினைவிலிருக்கட்டும்.

தங்க வயல், தருகிற போதனை இதுதான் ஆட்சியாளருக்கு!

போராட்டம்

திராவிடர் வார இதழ்

12 பக்கங்கள் விலை அணு 2

ஆண்டுச் சந்தா ரூ. 6

ஆறு மாதம் ரூ. 3

இப்பொழுது விற்பனையாகிறது. தமிழ் நாடெங்கும் முன் பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

நிர்வாகி, "போராட்டம்"

(A) திருவத்திபுரம்.

1951
ஜூலை
29-ம்
நாள்

எழுத்துரிமை * பேச்சுரிமை

மாநாடு

திண்டுக்கல்

வாரீர் திரண்டு!

திண்டுக்கல் நாகல்நகர்

அழகிரி பந்தலில்

தலைவர்:

இரா. சு. தங்கப்பழம்

துவக்குபவர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

பொதுச் செயலாளர் சி. என். ஏ., இரா நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத், கே. ஆர் இராமசாமி, என். வி. நடராசன், சி. பி. சிற்றரசு, சத்தியவாணிமுத்தம்மையார், அரங்கண்ணல், காஞ்சி. கல்யாணசுந்தரம், ஏ. கே. வேலன், தில்லை-வில்லாளன் பேசுவர்.

இசை முரசு இ. எம். அனீபா

இன்னிசை உண்டு

இரவு!

W. P. A. சவுந்தரபாண்டியன்

தலைமையில்

சந்திரமோகன்

நாடகம்

நாரணமங்கலத்தில் சிறை சென்ற தோழர்களுக்கு வரவேற்பளிக்கப்படும்.

நன்கொடையாளர் ரூ. 5.

வரவேற்பாளர் ரூ. 3.

பார்வையாளர் ரூ. 1.

பெண்கள் அணு 8.

வரவேற்புக்குழுவார்.

Edited, Printed & Published by C. N. Annadurai M A at "DravidaNadu" Press